**புன்செய் புளியம்பட்டி நகராட்சி 05.02.2018–ஆம் நாளன்று நடைபெற்ற தனி அலுவலரின்அவசரக் கூட்ட தீர்மான நகல்**

**<u>பொருள் : 1</u>**

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள், எல்லைகள் வரையறை ஆணையத்தால் வெளியிடப்பட்ட விதிகள் DC Order No.1/2017/TNDC/EG1 நாள்.12.09.2017–இல் கண்டுள்ள வழிமுறைகளின் படியும், ஈரோடு மாவட்ட மறு வரையறை அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சியர் அவர்களின் உத்தரவின் படியும் புன்செய்ப்புளியம்பட்டி நகராட்சியில் 18 வார்டுகளுக்கும் 2011–ஆம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பு விபரம் மற்றும் 31.03.2017ஆம் தேதி வரை உள்ள குடியிருப்பு சொத்துவரி கேட்பு பதிவேட்டின் அடிப்படையிலும், வார்டு மறு வரையறை செய்யப்பட்டு, மன்றத்தின் ஒப்புதல் பெற்றும் தமிழ்நாடு மறு வரையறை ஆணையம், சென்னை அவர்களின் ஒப்புதல் படியும் வரைவு மறு வரையறை கருத்துரு 29.12.2017 அன்று வெளியிடப்பட்டு பெறப்பட்ட ஆட்சேபணைகள் மீது 01.02.2018ம் தேதிய மாநில மறுவரையறை ஆணையர், சென்னை அவர்களின் கருத்து கேட்பு கூட்டத்தில் அறிவுறுத்தியதன் படியும் குறைகள் சரிசெய்யப்பட்டு இறுதி வரைவு வார்டு வரையறை கருத்துரு மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

(ந.க.எண்.995/2017/இ1)

**தீர்மான எண் :** 779

**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு ஒப்புதல் வழங்கப்பட்டது

(ஒப்பம்) என். தட்சிணாமூர்த்தி,
தனி அலுவலர்,
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.

//உண்மை நகல்//

ஆணையாளர்,
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.

**புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி 05.02.2018–ம் நாளன்று நடைபெற்ற**

**தனி அலுவலரின் அவசரக்கூட்ட தீர்மான நகல்**

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள், எல்லைகள் வரையறை ஆணையத்தால் வெளியிடப்பட்ட விதிகள் DC Order No.1/2017/TNDC/EG1 நாள்.12.09.2017–இல் கண்டுள்ள வழிமுறைகளின் படியும், ஈரோடு மாவட்ட மறு வரையறை அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சியர் அவர்களின் உத்தரவின் படியும் புன்செய்ப்புளியம்பட்டி நகராட்சியில் 18 வார்டுகளுக்கும் 2011–ஆம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பு விபரம் மற்றும் 31.03.2017ஆம் தேதி வரை உள்ள குடியிருப்பு சொத்துவரி கேட்பு பதிவேட்டின் அடிப்படையிலும், வார்டு மறு வரையறை செய்யப்பட்டு, மன்றத்தின் ஒப்புதல் பெற்றும் தமிழ்நாடு மறு வரையறை ஆணையம், சென்னை அவர்களின் ஒப்புதல் படியும் வரைவு மறு வரையறை கருத்துரு 29.12.2017 அன்று வெளியிடப்பட்டு பெறப்பட்ட ஆட்சேபணைகள் மீது 01.02.2018ம் தேதிய மாநில மறுவரையறை ஆணையர், சென்னை அவர்களின் கருத்து கேட்பு கூட்டத்தில் அறிவுறுத்தியதன் படியும் குறைகள் சரிசெய்யப்பட்டு இறுதி வரைவு வார்டு வரையறை கருத்துரு மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

(ந.க.எண்.995/2017/இ1)

**தீர்மான எண் : 779**
**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்படுகிறது.**

(ஒப்பம்) ந. தட்சணாமூர்த்தி,
தனி அலுவலர்,
புன்செய்ப்புளியம்பட்டி நகராட்சி.

// உண்மை நகல் //

ஆணையாளர்,
புன்செய்ப்புளியம்பட்டி நகராட்சி.

**புன்செய் புளியம்பட்டி நகராட்சி 21.02.2018–ம் நாளன்று நடைபெற்ற**
**தனி அலுவலரின் சாதாரணக்கூட்ட தீர்மான நகல்**

பொருள் : 1

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி நகராட்சி ஆணையாளர் அவர்களின் ஜனவரி 2018 மாதத்திய நாட்குறிப்பு தனி அலுவலரின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–** தனி அலுவலர் பார்வையிடலாம்.

(ந. க. எண். 195/2017/அ1)

**தீர்மான எண் :** 780
**தீர்மானம் : ஆணையாளரின் ஜனவரி 2018 மாத நாட்குறிப்பு பார்வையிடப்பட்டது.**

(ஒப்பம்) ந. தட்சணாமூர்த்தி,
தனி அலுவலர்,
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

// உண்மை நகல் //

ஆணையாளர் ,
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

**புன்செய் புளியம்பட்டி நகராட்சி 21.02.2018–ம் நாளன்று நடைபெற்ற**
**தனி அலுவலரின் சாதாரணக்கூட்ட தீர்மான நகல்**

**பொருள் : 2**

இயக்குநர், தமிழ்நாடு நகரியியல் பயிற்சி நிறுவனம், கோவை அவர்களின் **01.02.2018–** ந் தேதிய கடிதம் மற்றும் அரசு ஆணை எண்.145 ந.நி.(ம) கு.வ (ME1) நாள். **21.09 2011–**ன்படி மேற்கண்ட பயிற்சி நிறுவனத்திற்கு **2017–2018–**ம் ஆண்டிற்கான இந்நகராட்சி பங்குத் தொகை ரூ. 20,000/– செலுத்த அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** தனி அலுவலர் அனுமதி வழங்கலாம்.
( /2018/அ1)

**தீர்மான எண் :** 781
**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

(ஒப்பம்) ந. தட்சணாமூர்த்தி,
தனி அலுவலர்,
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

// உண்மை நகல் //

ஆணையாளர் ,
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

**புன்செய் புளியம்பட்டி நகராட்சி 21.02.2018–ம் நாளன்று நடைபெற்ற**
**தனி அலுவலரின் சாதாரணக்கூட்ட தீர்மான நகல்**

**பொருள் : 3**

புன்செய்ப்புளியம்பட்டி நகராட்சிக்கு சொந்தமான தலைமை நீரேற்று நிலையம் பவானிசாகர் அணையில் அமைக்கப்பட்டு, குடிநீர் விநியோகம் 200mm DI மற்றும் 250mm AC பிரதான குழாய்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இக்குழாய்கள் அமைக்கப்பட்டு, பல ஆண்டுகள் ஆவதாலும், குடிநீர் அழுத்தம் அதிகமாக வருவதாலும், பைப்புகள் அடிக்கடி பழுதடைந்து குடிநீர் விநியோகம் பாதிக்கப்படுகிறது. மேலும், இந்நகராட்சியில் இரண்டு நாட்களுக்கு ஒரு முறையே குடிநீர் விநியோகம் மேற்கொள்ளப்படுகிறது. தற்பொழுது நகராட்சியின் நிர்வாக ஆணையர், சென்னை அவர்கள் தினந்தோறும் குடிநீர் விநியோகம் ஆணை பிறப்பித்துள்ளார். இப்பணிக்காக நகராட்சியின் பல்வேறு இடங்களில் உள்ள பிரதான குடிநீர் குழாய்கள் மாற்றப்பட வேண்டும். மேலும், அதிக அளவில் மேல்நிலை நீர் தேக்க தொட்டிகள் கட்டப்பட வேண்டும். இப்பணிக்காக விரிவான திட்ட அறிக்கை மற்றும் மதிப்பீடுகள் தனியார் பொறியியல் நிறுவனத்திடமிருந்து பெறப்பட வேண்டும். இப்பணிக்காக தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.10.00 இலட்சத்திற்கு தனி அலுவலரின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் :** 782
**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

(ஒப்பம்) ந. தட்சணாமூர்த்தி,
தனி அலுவலர்,
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

// உண்மை நகல் //

ஆணையாளர் ,
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

**புன்செய் புளியம்பட்டி நகராட்சி 21.02.2018–ம் நாளன்று நடைபெற்ற தனி அலுவலரின் சாதாரணக்கூட்ட தீர்மான நகல்**

**பொருள் : 4**

இந்நகராட்சியின் ஏப்ரல் **2013** முதல் மார்ச் **2014** வரை உள்ள காலத்தில், வசூல் செய்யப்பட்ட சேவைவரி முழுவதும் செலுத்தப்பட்டுள்ளது. இதற்குரிய வட்டி மற்றும் அபராதக் கட்டணம் செலுத்தப்பட வேண்டும் என Order in Appeal No. 8/2015 நாள். **12.11.2015** மற்றும் Order in Appeal No. 9/2015 நாள். **12.11.2015** –ல் சேவைவரி, உதவி ஆணையர், ஈரோடு அவர்களால் உத்திரவிடப்பட்டது.

மேற்படி வட்டி மற்றும் அபராதக்கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்க கோரி, CESTAT, Chennai –ல் இந்நகராட்சி சார்பாக திரு.எம்.முத்துகுமார், சேவைவரி ஆலோசகரால் வழக்கு தொடரப்பட்டது. மேற்படி வழக்கில், இறுதி தீர்ப்பாக CESTAT, Chennai Final Order No.41934 மற்றும் **41935** நாள். **03.08.2017–ம்** தேதிய தீர்ப்பில் அபராதக் கட்டணம் தள்ளுபடி செய்யப்பட்டும் வட்டி தொகை செலுத்தவும் உத்திரவிடப்பட்டுள்ளது.

மேற்படி வழக்கில், வட்டித்தொகை கணக்கீடு செய்யப்பட்டு, கண்காணிப்பாளர், மத்திய கலால் வரித்துறை, சத்தியமங்கலம் அவர்களால் பட்டியல் அனுப்பப்பட்டு உள்ளது. பட்டியல்படி ரூ.**24791/–** செலுத்துமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. தனி அலுவலரின் ஒப்பதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** : அனுமதிக்கலாம்.
(ந. க. எண். **1311/2011**/அ**1**)
**தீர்மான எண் :** 783
**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

(ஒப்பம்) ந. தட்சணாமூர்த்தி,
தனி அலுவலர்,
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

// உண்மை நகல் //

ஆணையாளர் ,
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

**புன்செய் புளியம்பட்டி நகராட்சி 21.02.2018–ம் நாளன்று நடைபெற்ற தனி அலுவலரின் சாதாரணக்கூட்ட தீர்மான நகல்**

பொருள் : 5

இந்நகராட்சியின் சேவைவரி ஆலோசகர், திரு. M. முத்துகுமார் என்பவர் ஏப்ரல் 2013' முதல் மார்ச் 2014' வரை உள்ள காலத்திற்குரிய சேவைவரி செலுத்தப்பட்டது. அதற்குரிய வட்டி மற்றும் அபராதக் கட்டணம் செலுத்துவதை தள்ளுபடி செய்யக்கோரி, 'CESTAT, Chennai' –ல் நகராட்சி சார்பாக வழக்கு போடப்பட்டதில், 03.08.2017–ம் தேதிய 'CESTAT, Chennai' யின் Final Order No. 41934 மற்றும் 41935–ல் அபராதக் கட்டணம் தள்ளுபடி செய்யப்பட்டு உத்திரவிடப்பட்டது.

மேற்படி வழக்கிற்கான வழக்குக்கட்டணம் ரூ.47,000/– சேவைவரி ஆலோசகர் திரு. M. முத்துகுமார் என்பவருக்கு வழங்க தனி அலுவலரின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** : அனுமதிக்கலாம்.

(ந. க. எண். 1311/2011/அ1)

**தீர்மான எண் :** 784

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

.

(ஒப்பம்) ந. தட்சணாமூர்த்தி,
தனி அலுவலர்,
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

// உண்மை நகல் //

ஆணையாளர் ,
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

**புன்செய் புளியம்பட்டி நகராட்சி 21.02.2018–ம் நாளன்று நடைபெற்ற**
**தனி அலுவலரின் சாதாரணக்கூட்ட தீர்மான நகல்**

**பொருள் : 6**

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதி வார்டு எண் 1 முதல் 5 வரையிலான பகுதிகளில் முதற்கட்ட சேகரிப்பு மற்றும் இரண்டாம் கட்ட சேகரிப்பு வடிகால்களை சுத்தம் செய்தல் மற்றும் சேகரிக்கப்பட்ட குப்பைகள் மற்றும் கழிவுகளை நகராட்சி உரக்கிடங்கில் கொண்டு சேர்க்கும் பணிக்கு திரு.வி.ஜெயராஜ் என்பவருக்கு நிபந்தனைகளுக்கு உட்பட்டு இவ்வலுவலக செயல்முறை உத்திரவு ந.க.எண் அ1/25/2016 நாள்01.03.2016–ல்,14.03.2016 முதல் இரண்டு ஆண்டு காலத்திற்கு இப்பணியினை செய்ய உத்திரவிடப்பட்டு உள்ளது. மேற்படி இரண்டு ஆண்டு ஒப்பந்த காலம் 13.03.2018 உடன் முடிவடைவதால், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அனுமதி பெற்று தனியார் மூலம் ஒப்பந்தப்பணி வழங்கப்படும் நாள் வரை தற்பொழுது பணிபுரிந்து வரும் ஒப்பந்தாரர் திரு.வி.ஜெயராஜ் என்பவருக்கு பொது சுகாதாரத்தின் அவசர அவசியம் கருதி மேலும் 3 மாதங்களுக்கு ஒப்பந்தத்தை நீடிப்பு செய்து துப்புரவு பணிகள் மேற்கொள்ள தனிஅலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கையில் தெரிவித்துள்ளபடி திடக்கழிவு மேலாண்மை திட்டத்தை செயல்படுத்த நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் அனுமதி பெற்று புதிதாக ஒப்பந்தப்புள்ளி கோரி தனியார் மூலம் ஒப்பந்தப்பணி வழங்கப்படும் நாள் வரை நீடிப்பு செய்து நடவடிக்கை மேற்கொள்ள தனிஅலுவலர் அனுமதிக்கலாம்.

(25/2016/அ1)

**தீர்மான எண் :** 785
**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

(ஒப்பம்) ந. தட்சணாமூர்த்தி,
தனி அலுவலர்,
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

// உண்மை நகல் //

ஆணையாளர் ,
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

புன்செய் புளியம்பட்டி நகராட்சி 21.02.2018–ம் நாளன்று நடைபெற்ற
தனி அலுவலரின் சாதாரணக்கூட்ட தீர்மான நகல்

பொருள் : 7

இந்நகராட்சிக்கு சொந்தமான கீழ்கண்ட குத்தகை இனங்களுக்கு 01.04.2018 முதல் 31.03.2021 வரை உள்ள மூன்றாண்டு காலத்திற்கு, 19.02.2018 அன்று பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றது, மேற்படி பொது ஏலம் மறறும் ஒப்பந்தப்புள்ளியில் உயர்ந்த பட்ச ஏல கேள்வி கோரிய கீழ்கண்டுள்ள நபர்களுக்கு குத்தகை உரிமம் வழங்க மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

2018–19 முதல் 2020–2021 முடிய உள்ள 3 ஆண்டுகளுக்கான சுங்கம் மற்றும் கட்டணம் வசூலிக்கும் உரிமத்திற்கான பொது ஏலம்.

| வ. எண் | உரிமம் விவரம் | தற்போது ஏலத்தில் உயர்ந்த கேள்வி கேட்ட ஏலதாரர்களின் பெயர் | முந்தைய ஆண்டுகளில் ஏலத்தொகை | | பொது ஏலத்தில் கேட்கப்பட்ட உயர்ந்த ஏலக் கேள்வி தொகை | மூடி முத்திரையிடப்பட்ட வரப்பட்ட ஒப்பந்தப் புள்ளி யின் உயர்ந்த ஏல கேள்வி |
|---|---|---|---|---|---|---|
| | | | சென்ற ஆண்டு தொகை ரூ. | சராசரித் தொகை ரூ. | | |
| 1 | புன்செய் புளியம்பட்டியில் புதன் கிழமை மற்றும் வியாழன் தோறும் கூடும் வாரச் சந்தையில் சுங்கம் வசூலிக்கும் உரிமம் | 1. ஏலதாரர் பெயர் : ரா.நாச்சிமுத்து , பெருமாபாளையம். 2. ஒப்பந்தப்புள்ளிதாரர் பெயர் : கி. நடராஜன், கோயமுத்தூர். | 2784915/– | 2654405/– | 3400000/– | 4100100/– ( Including GST) |
| 2 | புன்செய் புளியம்பட்டி நகராட்சி பேருந்து நிலையத்தில் உள்ள கட்டண கழிப்பிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 1. ஏலதாரர் பெயர் :திரு. எ. ரவிச்சந்திரன், த/பெ. ஆறுமுகம், | 557865/– | 531722/– | 591000/– | ஒப்பந்தப் புள்ளி ஒருவரும் கொடுக்க வில்லை |
| 3 | புன்செய் புளியம்பட்டி நகராட்சி தினசரி சந்தையில் சுங்கம் வசூலிக்கும் உரிமை மற்றும் மேற்படி சந்தையில் உள்ள கடை எண். 1 முதல் 50 வரை உள்ள கடைகளுக்கு தினசரி கட்டணம் வசூலிக்கும் உரிமம். | 1. ஏலதாரர் பெயர் :திரு. எ. ரவிச்சந்திரன், த/பெ. ஆறுமுகம், 2. ஒப்பந்தப்புள்ளிதாரர் பெயர் : ஜெ.வெங்கடாசலம், திருப்பூர். | 531405/– | 506501/– | 770000/– | 730000/– |
| 4 | திரு.வி.க.திடலில் உள்ள கட்டண கழிப்பிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 1. ஏலதாரர் பெயர் :திருமதி. த. சுகன்யா, க/பெ. ரா.தமோதரன், | 192938/– | 551688/– | 203200/– | ஒப்பந்தப் புள்ளி ஒருவரும் கொடுக்க வில்லை |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 5 | வாரச்சந்தையில் உள்ள கட்டண கழிப்பிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | – | – | – | ஏலத்தில் ஒருவரும் கலந்துக் கொள்ள வில்லை | ஒப்பந்தப் புள்ளி ஒருவரும் கொடுக்க வில்லை |
| 6 | வாரச்சந்தையில் உள்ள புளிய மரங்களின் மேற்பலனை அனுபவிக்கும் உரிமம். | 1. ஏலதாரர் பெயர் :திரு. எ. ரவிச்சந்திரன், த/பெ. ஆறுமுகம், | 7994/– | 7619/– | 5800/– | ஒப்பந்தப் புள்ளி ஒருவரும் கொடுக்க வில்லை |
| 7 | வாரச்சந்தையில் குப்பை சேகரிக்கும் உரிமம். | – | – | – | ஏலத்தில் ஒருவரும் கலந்துக் கொள்ள வில்லை | ஒப்பந்தப் புள்ளி ஒருவரும் கொடுக்க வில்லை |
| 8 | பேருந்து நிலையத்தில் எடை பார்க்கும் கருவி அமைத்தல் | – | – | – | ஏலத்தில் ஒருவரும் கலந்துக் கொள்ள வில்லை | ஒப்பந்தப் புள்ளி ஒருவரும் கொடுக்க வில்லை |
| 9 | நகராட்சி அலுவலகம் திருமண மண்டபம் மற்றும் மேல்நிலைத் தொட்டி வளாகத்தில் உள்ள தென்னை மரங்களின் மேற்பலன் | 1. ஏலதாரர் பெயர் :திருமதி. ரா. ராஜாத்தி, க/பெ. எம்.கே.ராஜேந்திரன், | 8986/– | 8565/– | 5500/– | ஒப்பந்தப் புள்ளி ஒருவரும் கொடுக்க வில்லை |

**அலுவலக குறிப்பு**

1. மேற்கண்ட குத்தகை இனங்களில் வரிசை எண். 1–ல் ஒப்பந்தப்புள்ளியில் தெளிவாக தொகை குறிப்பிடாமல் "GST இருந்தால் வரி உட்பட" என குறிப்பிடப்பட்டுள்ளதால் மேற்படி ஏலத்தினையும் ஒப்பந்தப்புள்ளியினையும் ஏற்க இயலாததால் மறுஏலம் கோரலாம்.

2. மேற்கண்ட குத்தகை இனங்களில் வரிசை எண். 3 மற்றும் 4–ல் சென்ற ஆண்டு மற்றும் மூன்றாண்டு சராசரி ஏலத்தொகையை காட்டிலும் கூடுதலாக உயர்ந்த பட்ச ஏலக்கேள்வி தொகை கோரப்பட்டுள்ள மேற்படி ஏலதாரருக்கு உரிமம் வழங்கலாம்.

3. மேற்கண்ட குத்தகை இனங்களில் வரிசை 2,6 மற்றும் 9 ஆகிய இனங்களுக்கு ஏலத்தொகை மிகவும் குறைவாக உள்ளதால் மறுஏலம் கோரலாம்.

4. மேற்கண்ட குத்தகை இனங்களில் வரிசை 5,7 மற்றும் 8 ஆகிய இனங்களுக்கு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி எவரும் கோராததால், இக்குத்தகை இனங்களுக்கு மறு ஏலம் கோரலாம்.

**தீர்மான எண் :** 786
**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

(ஒப்பம்) ந. தட்சணாமூர்த்தி,
தனி அலுவலர்,
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

// உண்மை நகல் //

ஆணையாளர் ,
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

**புன்செய் புளியம்பட்டி நகராட்சி 21.02.2018–ம் நாளன்று நடைபெற்ற தனி அலுவலரின் சாதாரணக்கூட்ட தீர்மான நகல்**

**பொருள் : 8**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்கு சொந்தமான தலைமை நீரேற்று நிலையம் அமைந்துள்ள பவானிசாகரிலிருந்து நகராட்சிக்குட்பட்ட பகுதிகளிலுள்ள நெடுஞ்சாலை துறைக்கு சொந்தமான சாலையினை அகலப்படுத்தி அமைக்க நெடுஞ்சாலை துறையினரால், முன்னேற்பாட்டு பணிகள் மேற்க்கொள்ளப்பட்டு வருகிறது.

பவானிசாகர் பிரதான நெடுஞ்சாலையில், தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து அண்ணா நகர் நீருந்து நிலையம் வழியாக புன்செய்ப்புளியம்பட்டி நகராட்சி வரையிலும் மற்றும் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள குடிநீர் மேல்நிலை தொட்டிகள் வரையிலும், குடிநீர் விநியோக பிரதான பகிர்மான குழாய்கள் மற்றும் குடிநீர் உந்து குழாய்கள் (Pumping Main) அமைக்கப்பட்டுள்ளன.

பவானிசாகர் சாலையை நெடுஞ்சாலை துறை அகலப்படுத்தும் போது, மேற்படி பிரதான குடிநீர் விநியோக குழாய்கள் மற்றும் குடிநீர் உந்து குழாய்கள் சாலையின் மத்திய பகுதியில் அமையும் நிலையுள்ளது. மேற்படி நெடுஞ்சாலையானது பண்ணாரி அம்மன் கோவில் மற்றும் மைசூர் செல்லும் பிரதான சாலையாக நகரின் மத்தியில் அமைந்துள்ளது.

எனவே, மேற்படி சாலையில், கனரக வாகனங்கள் மற்றும் போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருக்கும் நிலையில் தற்சமயம் நான்கு வழி சாலையாக அகலப்படுத்தும் போது சாலையின் மத்தியில் அமைந்துள்ள குடிநீர் உந்து குழாய்கள் மற்றும் குடிநீர் வினியோக குழாய்கள் பழுது, உடைப்பு மற்றும் கசிவு ஏற்படும் நிலையில் உடனுக்குடன் பழுது சரிசெய்ய இயலாத நிலை ஏற்படும் வாய்ப்புள்ளது. இதனால் நகரில் குடிநீர் பிரச்சனைகள் ஏற்படவும் வாய்ப்புள்ளது.

தலைமை நீரேற்று நிலையம் நகரிலிருந்து 17கி.மீ. தொலைவிலிருந்து குடிநீர் உந்தப்படுவதாலும், உந்து குழாய்கள் சாலை வழி பகுதியில் வருவதாலும், கால்வாயை, கடந்து வருவதாலும் மண்ணின் தன்மைக்கு ஏற்றார் போல் விரிவடைந்தும் சுருங்கியும் நிலத்தின் தன்மை மாறுபடுவதால் 1972 மற்றும் 2002ல் அமைக்கப்பட்ட குடிநீர் உந்து குழாய்களில் அடிக்கடி பழுது ஏற்பட்டு வருவதால் கோடை காலங்களில், குடிநீர் வினியோகம் பாதிப்படைந்து வருகிறது.

ஆகவே, சாலையின் குறுக்காக குடிநீர் உந்து குழாய், மற்றும் குடிநீர் வினியோக குழாய் செல்லாதவாறு நெடுஞ்சாலை துறையின் நான்கு வழி சாலை அகலப்படுத்தும் பகுதியில் சாலையின் வலதுபுறம் குடிநீர் வினியோக குழாய், (Distribution main) தனித்தனியே புதியதாக DI K7 pipe அமைக்கப்பட வேண்டும். குடிநீர் விநியோக மேம்பாடு செய்யும் பொருட்டு தமிழ்நாடு குடிநீர் முதலீட்டு நிறுவனம் (TWIC) கலந்தாலோசகர் மூலம் தயார் செய்து பெறப்பட்ட ரூ.14.80 கோடி மதிப்பீட்டில் விரிவான திட்ட அறிக்கையினை முதன்மை பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரக கடிதம் ந.க.எண்.7567 / 2015 / குவ1, நாள்.11.03.2015 மூலம் நிதி ஆதாரம் பெற மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு நகர்புற உட்கட்டமைப்பு நிதி சேவை நிறுவனம் அவர்களுக்கு பரிந்துரை செய்யப்பட்டது.

மேற்படி குடிநீர் திட்டம் குறித்தான ஆய்வுக்கூட்டம் TNUFSL நிறுவனத்தில் நடத்தப்பட்டது. மேற்படி ஆய்வுக்கூட்டத்தில் திட்ட அறிக்கையில் சில மாற்றங்களும், மேலும் ஏற்கனவே குடிநீர் விநியோகத்தில் மட்டும் மேம்பாடு செய்திட TWIC கலந்தாலோசகர் மூலம் தயாரிக்கப்பட்ட திட்ட

அறிக்கையினையும் ஒருங்கிணைத்து உரிய மாற்றங்கள் செய்து ஒருங்கினைந்த விரிவான திட்ட அறிக்கை அளித்திட தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி ஒருங்கிணைந்த விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணியினை ஏற்கனவே குடிநீர் பகிர்மானம் மேம்பாடு செய்திட திட்ட அறிக்கை அளித்துள்ள TWIC நிறுவனம் மூலம் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களிடம் அனுமதி பெறப்பட்டதன்படி, TWIC நிறுவனத்தின் மூலம் குடிநீர் ஆதாரத்தினை மேம்பாடு செய்தல், நீரேற்று குழாய்கள் மாற்றி அமைத்தல் மற்றும் ஏற்கனவே வழங்கும் குடிநீர் விநியோகத்தில், மேம்பாடு செய்திட தயாரிக்கப்பட்ட திட்ட அறிக்கை ஆகியவற்றை ஒருங்கிணைத்து, திருத்திய திட்ட அறிக்கை ரூ.20.00 கோடி மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டுள்ளது.

தற்போது இந்நகராட்சி பகுதிகளில் 2 நாட்களுக்கு ஒரு முறை குடிநீர் விநியோக செய்யப்பட்டு வருகிறது. இத்திட்டம் பயன்பாட்டுக்கு வரும் தருவாயில் தினசரி குடிநீர் விநியோகம் வழங்குவதற்கு வகை செய்யப்பட்டுள்ளது. இப்பணி மிகவும் அவசியமான பணியாகும். இதற்கான நிதியினை JICA / Kfw / TNSUDP அல்லது இதர அரசு மானியத்திலிருந்து நிதி வழங்கிட உரிய வழிமுறையாக அரசினை கேட்டுக்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண் :** 787
**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

(ஒப்பம்) ந. தட்சணாமூர்த்தி,
தனி அலுவலர்,
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

// உண்மை நகல் //

ஆணையாளர் ,
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

**புன்செய் புளியம்பட்டி நகராட்சி 21.02.2018–ம் நாளன்று நடைபெற்ற**
**தனி அலுவலரின் சாதாரணக்கூட்ட தீர்மான நகல்**

**பொருள் : 9**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் நிதி 2017–18 ல் கீழ்க்கண்ட பணி மேற்கொள்ள மாவட்ட ஆட்சியர் ஈரோடு அவர்களின் ந.க.எண்.1502/17/அ3 நாள் 23.01.2018–ம் தேதிய நடவடிக்கைகளின்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டு 08.02.2018 அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| **வ. எண்** | **பணியின் பெயர்** | **மதிப்பீட்டுத் தொகை** | **ஒப்பந்ததாரர் பெயர்** | **விழுக்காடு** |
|---|---|---|---|---|
| 1. | புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி காந்தி நகர் வார்டு எண்.10 சமுதாய கூடம் அருகில் 30000 லிட்டர் கொள்ளளவு உள்ள தரை மட்ட தொட்டி (சம்ப்) கட்டுதல் 7.50HP நீர் மூழ்கி மின் மோட்டார் பொருத்தி குடிநீர் வழங்குதல் பணி செய்தல் | 4.50 இலட்சம் | வி.பி.என் பில்டர்ஸ் திருப்பூர் | 4.41% மதிப்பீட்டை விட அதிகம் |
| 2. | | | திரு.மூர்த்தி மஞ்சகோம்பை | 6.15 % மதிப்பீட்டை விட அதிகம் |

**அலுவலக குறிப்பு**

1. வரப்பெற்ற மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய வி.பி.என் பில்டர்ஸ் திருப்பூர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம். கூடுதல் செலவீனத்தை பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.18/2018/இ1)
**தீர்மான எண் :** 788
**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

(ஒப்பம்) ந. தட்சணாமூர்த்தி,
தனி அலுவலர்,
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

// உண்மை நகல் //

ஆணையாளர் ,
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

**புன்செய் புளியம்பட்டி நகராட்சி 21.02.2018—ம் நாளன்று நடைபெற்ற**
**தனி அலுவலரின் சாதாரணக்கூட்ட தீர்மான நகல்**

**பொருள் : 10**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் நிதி 2017—18 ல் கீழ்க்கண்ட பணி மேற்கொள்ள மாவட்ட ஆட்சியர் ஈரோடு அவர்களின் ந.க.எண்.1502/17/அ3 நாள் 23.01.2018—ம் தேதிய நடவடிக்கைகளின்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டு 08.02.2018 அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1. | புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி இந்திரா நகரில் 30000 லிட்டர் கொள்ளளவில் மேல் நிலைத்தொட்டி கட்டுதல் (வார்டு எண்.14) குடிநீர் பணி செய்தல் | 5.50 இலட்சம் | வி.பி.என் பில்டர்ஸ் திருப்பூர் | 4.7% மதிப்பீட்டை விட அதிகம் |
| 2. | | | திரு.மூர்த்தி மஞ்சகோம்பை | 6.0 % மதிப்பீட்டை விட அதிகம் |

**அலுவலக குறிப்பு**

1. வரப்பெற்ற மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய வி.பி.என் பில்டர்ஸ் திருப்பூர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம். கூடுதல் செலவீனத்தை பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.18/2018/இ1)

**தீர்மான எண் :** 789
**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

(ஒப்பம்) ந. தட்சணாமூர்த்தி,
தனி அலுவலர்,
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

// உண்மை நகல் //

ஆணையாளர் ,
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

புன்செய் புளியம்பட்டி நகராட்சி 21.02.2018–ம் நாளன்று நடைபெற்ற
தனி அலுவலரின் சாதாரணக்கூட்ட தீர்மான நகல்

பொருள் : 11

இந்நகராட்சியின் குடிநீர் பிரிவில் அடியிற்கண்ட பணிகளை தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 விதி–15ன் படி செய்து முடிக்கப்பட்டதை மன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | ந.க.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை | ஒப்பந்ததாரர் |
|---|---|---|---|---|
| 1. | 197/2018/இ1 | நகராட்சிக்குட்பட்ட சுல்தான் ரோடு எஸ்.ஆர்.டி தியேட்டர் முதல் திரு.வி.க கார்னர் அலங்கார் ஸ்டுடியோ வரை நெடுஞ்சாலை துறையினரால் சாலை விரிவாக்கப் பணி நடைபெற்று வருவதால் அதனால் ஏற்பட்ட பிரதான குடிநீர் வநியோக குழாய்கள் உடைப்பு சரி செய்தல். | ரூ.150000/– | திரு.ஜெயராஜ், ஒப்பந்ததாரர் |
| 2. | 188/2018/இ1 | பவானிசாகர் தலைமை நீரேற்று நிலையத்தில் இருந்து வரும் பிரதான குடிநீர் குழாயானது பொன்னம்பாளையம் EB ஆபிஸ் அருகில் பனையம்பள்ளி மேட்டுப் பகுதியில் உள்ள கம்பெனி முன்புறம் மற்றும் பவானிசாகர் நால்ரோடு அருகில் (200mm மற்றும் 250mm ac) உள்ள குழாய்கள் உடைப்பு ஏற்பட்டதை சரி செய்தல். | ரூ.62000/– | ஸ்ரீ ஜெய் சக்தி இன்ஜினியரிங் ஒர்க்ஸ், புன்செய்ப்புளியம்பட்டி |
| 3. | 234/2018/இ1 | இந்நகராட்சிக்குட்பட்ட திரு.வி.க கார்னர் கடை எண்.9,10 மற்றும் ஜவகர் மெயின் ரோட்டில் உள்ள கடை எண்.31ல் பராமரிப்பு மற்றும் பழுது நீக்கப் பணிகள் மேற்கொள்ளுதல். | ரூ.250000/– | திருமதி.புனிதவதி, ஒப்பந்ததாரர் |
| 4. | 243/18/இ1 | இந்நகராட்சிக்குட்பட்ட மாதம்பாளையம் நீர்த்தேக்கத் தொட்டியில் வால்வுகள் பழுது பார்த்தல் மற்றும் குளோரினேசன் செட் அமைத்தல் | ரூ.250000/– | திருமதி.வள்ளியம்மாள், ஒப்பந்ததாரர் |

**தீர்மான எண் :** 790
**தீர்மானம் :** இப்பணிகள் பதிவு செய்யப்பட்டது.

(ஒப்பம்) ந. தட்சணாமூர்த்தி,
தனி அலுவலர்,
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

// உண்மை நகல் //

ஆணையாளர் ,
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.